


■ யோகதா சத்சங் மடத்தின் 100-வது ஆண்டு விழாவையொட்டி, டெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற விழாவில் நினைவு தபால் தலையை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

# இந்தியாவின் வலிமையே அதன் ஆன்மிகம்தான்

## பிரதமர் மோடி புகழாரம்

புதுடெல்லி, மார்ச் 8-
இந்தியாவின் வலிமையே அதன் ஆன்மிகம்தான் என புகழாரம் சூட்டிய பிரதமர் மோடி, "துரதிருஷ்டவசமாக ஒரு சிலர் அதை மதத்துடன் தொடர்புபடுத்திவிடுவதாக" கூறினார்.

### முதல் படி

பரமஹம்ச யோகானந்தர் உலகம் முழுவதும் ஆன்மிகத்தை பரப்பும் வகையில் 1917-ல் யோகதா சத்சங்கத்தை (ஒய்எஸ்எஸ்) நிறுவினார். அதன் நூற்றாண்டு விழா டெல்லியில் நேற்று நடந்தது.

இதில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி ஆன்மிக பயணத்தின் முதல் அடியே யோக கலைதான் என எடுத்துரைத்தார். மேலும் அவர் பேசியதாவது:-

### இந்தியாவின் வலிமை

மக்கள் தொகை, ஜிடிபி அல்லது வேலைவாய்ப்பு சதவீதம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் இந்தியாவை இந்த உலகம் ஒப்பிட்டுப் பார்க்கிறது.

இந்தியாவின் ஆன்மிகத்தைப் பற்றி உலகம் புரிந்து கொள்ளவும் இல்லை, அங்கீகரிக்கவும் இல்லை. இந்தியாவின் வலிமையே அதன் ஆன்மீகம் தான்.

### அப்துல் கலாம்

ஆனால் துரதிருஷ்டவசமாக ஒரு சிலர் மதத்துடன் தொடர்புபடுத்தி விடுகின்றனர். ஆன்மிகம் வேறு; மதம் வேறு.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இந்தியாவின் வலிமை ஆன்மிகம் தான் என்பதை உணர்ந்திருந்தார். நமது நாட்டின் ஆன்மிகத்தை ரிஷிகளும், துறவிகளும் தொடர்ந்து வலிமைப்படுத்தி வருகின்றனர்.

### தொடக்கப் புள்ளி

ஆன்மிகத்தின் தொடக்கப்புள்ளி யோக கலை. அதுதான் ஆன்மீக பயணத்தின் நுழைவு வாயிலும் கூட. அதை கடைசிப் புள்ளியாக யாரும் கருதிவிடக் கூடாது. யோக கலை மூலம் ஆன்மிக உலகத்துக்குள் எளிதாக நுழைய முடியும்.

யோக கலை மீது விருப்பம் கொண்டவர்கள், அதை நாள்தோறும் விடாமல் பயிற்சி செய்ய வேண்டும். வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாக யோக கலையை பாவிக்க வேண்டும்.

### கிரியா யோகம்

பரமஹம்ச யோகானந்தர் இந்த உலகத்துக்கு கிரியா யோகத்தை கற்றுக் கொடுத்தார். அந்த கலை நமது உடலுக்குள் இருக்கும் நுட்பமான உயிர் சக்திக்கு புத்துயிர் அளிக்கும்.

மனிதாபிமானத்தை பேணி வளர்க்கும் விதத்திலும், அனைவரிடத்திலும் இரக்கம் காட்டும் வகையிலும் யோகானந்தர் போதனைகளை வழங்கியிருக்கிறார்."

இவ்வாறு அவர் கூறினார்.